1981 மே 13]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, 600-க்கு மேற்பட்ட மையங்களிலே முதியோர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஊராட்சி நிறுவனங்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அப்படிப்பட்ட மையங்களை நடத்தி வருகிறார்களா? அல்லது சமுதாய சேவை செய்யக்கூடிய ஸ்தாபனங்கள் மட்டும் அதை நடத்தி வருகிறார்களா? சமுதாய சேவை செய்யக்கூடியவர்கள் அப்படி நடத்துவதற்கு முன்வந்தால் அவர்களுக்குத் தகுந்த உதவி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாடு முழுவதும் 61 ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 மையங்கள் வீதம் 6100 மையங்கள் சென்ற ஆண்டு நடைபெற்று இருக்கின்றன. தனிப்பட்ட தொண்டு நிறுவனங்கள் நடத்துகின்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் முதியோர்கள் அந்தப் பள்ளிகளுக்கு வந்து படிக்கின்ற அளவுக்கு நடத்துவது அல்லது முதியோர்கள் இருக்கின்ற இடங்களுக்கே சென்று சொல்லித் தருவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் அரசின் சார்பிலே நடத்துவதைப் பொறுத்தவரையிலே பெருமளவுக்குத் தோல்வி ஏற்பட்டு வருகின்றது என்பதை நாம் அனுபவத்திலே பார்க்கிறோம். தொண்டுள்ளமும் சேவை மனப்பான்மையும் உள்ளவர்கள் அதிலே பங்கெடுத்துக்கொண்டு செய்வார்களேயானால் அது ஓரளவுக்கு வெற்றி அடையும் என்பதை நாம் அனுபவத்திலே பார்த்து வருகிறோம். ஆகவேதான் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு முக்கியத்துவத்தை இந்தத் திட்டத்திலே தருகிறோம். அப்படித் தருகின்றபோது தவறான காரியங்களுக்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காக நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறோம்.

தோல் ஏற்றுமதி கழகம்

*வினா எண். 1061- திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் ஏற்றுமதி சென்டர் கான்பூருக்கு மாற்றப்பட்டது உண்மையா?

(ஆ) சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்யும் சென்டரை உருவாக்க தமிழ்நாடு அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:—

(அ) மற்றும் (ஆ) 1956ம் ஆண்டில் சென்னையில் முதல் முதலாக தோல் ஏற்றுமதி முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது. பிறகு 1962-63-ல் தோல் மற்றும் தோல் பொருள்கள் ஏற்றுமதி முன்னேற்றக்கழகம் கான்பூரில் நிறுவப்பட்டது. இந்த இரண்டுக்கழங்கங்களின் பணிகள் வெவ்வேறு. இது தவிர, தோல் தொழில் முன்னேற்றப் பணிகளை முன்பு ஆக்ராவிலும், தற்போது டில்லியிலும் உள்ள பாரத் லெதர் கார்ப்பரேஷன் கவனித்து வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாரத் லெதர் கார்ப்பொரேஷனுக்கு ஏற்றுமதிக்காக வருகிற பொருட்களில், நம்முடைய மாநிலத்திலிருந்துதான் அதிக அளவு தோல் உற்பத்தியாகிற காரணத்தால் அதிக அளவு தோல் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. ஆகவே அத்தகைய நிறுவனத்தைத் தமிழகத்திலே நிறுவும் வகையில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து இந்திய ஏற்றுமதியில், நம்முடைய சென்னை மாநிலத்திலிருந்துதான் 82 சதவீதம் தோல் மற்றும் தோல் சார்ந்த பொருள்கள் வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. எனவே, இங்கே சென்னையிலே இருக்கிற அந்த அலுவலகத்தை, முழு அளவிலான தோல்கள், அதாவது பினிஷ்ட் லெதர், செமிபினிஷ்ட் லெதர் அதேபோல தோல் பொருள்கள், தோல்கள்ஆகியவைகளை ஏற்றுமதி செய்வதற்கான முழு அளவிலானகார்ப்பொரேஷனாக மாற்ற வேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது. மத்திய அரசு அதைப் பற்றித் தன்னுடைய இறுதி முடிவை அறிவிக்கவில்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே தமிழகத்தில்தான் அதிகமான அளவு தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதுவும் வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்துதான் அதிகமான அளவில் தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு, வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய பகுதிகளில் ஏற்றுமதி சென்டர்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி சென்டர் ஏற்கெனவே சென்னையிலே இருக்கிறது. ஆனால் இப்பொழுது தமிழக அரசின் சார்பிலே புதிதாக தமிழ்நாடு லெதர் டெவலப்மென்ட் கார்ப்பொரேஷன் என்று தனியாக ஒரு நிறுவனத்தை நிறுவ வேண்டும் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்குத்தான் மத்திய அரசையும் அனுமதி கேட்டிருக்கிறது. அந்த நிறுவனத்தின் மூலமாகத் தமிழகத்தில் தோல், தோல்சார்ந்த பொருள்களுடைய தொழிற்சாலைகள் நிறுவி, அதிகமாக உற்பத்திசெய்து, அதன் மூலம் ஏற்றுமதியையும் பெருக்க வேண்டும்; அந்த வகையில் அதை விரிவு படுத்தவேண்டும் என்பது அரசின் குறிக்கோள். அந்த வகையில் தமிழ்நாடு லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் முனையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாரத் லெதர் கார்ப்பொரேஷன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தோல்களில் வரும் வருமானத்தில்ஒரு சதவீத பணத்தை கழிவு நீர் சுத்தப்படுத்துதல்

1981 மே 13]

போன்ற பணிகளுக்காக நிறுத்தி வைக்கிறார்கள். இந்தியாவில் ஏற்றுமதியாகும் தோல் பொருள்களில் 3/4 சதவீதம் தமிழகத்தில் இருந்துதான் ஏற்றுமதியாவதால், அப்படிப் பிடிக்கப்படும் 1சதவீத தொகையில் 3/4 பாகம் தமிழகத்திற்குத்தான் செலவிட வேண்டும் என்று வற்புறுத்த தமிழக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெறுவதற்குத் தமிழக அரசு எல்லா வகைகளிலும் முயற்சித்துக்கொண்டுதான் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..புல்லி பினிஷ்ட் தோல்கள்தான் ஏற்றுமதி செய்ய வேண்டும்; மற்றவைகளைச் செய்யக் கூடாது என்று மத்திய அரசு ஏதாவது தடை விதித்திருக்கிறதா? அந்த மாதிரி தடை இருப்பது உண்மையானால், அதன் காரணமாகத் தமிழகத்தில் உள்ள சிறு சிறு தோல் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்திருப்பதும் உண்மையா? அதை மாற்ற தமிழக அரசு, சிறு தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பாதுகாக்கக் கூடிய முறையில் செமி பினிஷ்ட் தோல்களையும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பினிஷ்ட் லெதர்தான் அனுப்பவேண்டுமென்று மத்திய அரசு தடை விதித்துத்தான் இருக்கிறது. ஏற்கனவே போன கேள்விக்குப் பதில் சொன்னேன். அதை மாற்றி முழு அளவிலான ஏற்றுமதிக்கு மத்திய அரசு இணங்கவேண்டும் என்று மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது, தொடர்ந்து வலியுறுத்தும்.

அரசு உதவி பெறும் தனியார் பஞ்சாலைகளில்
வேலைக்கு ஆள் எடுத்தல்

*வினா எண். 1062- திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அரசு உதவி பெற்று இயங்கும் தனியார் பஞ்சாலை மற்றும் நூல்மில்களில் வேலைக்கு ஆள் எடுக்கும் முறை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நடைபெறுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார் பஞ்சாலைகளில் வேலை வாய்ப்பு நிறுவனம் மூலமே ஆட்களை வேலைக்கு எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை.

திரு. என். பழனிவேல் : தனியார்துறையில் இயங்கக்கூடிய பஞ்சாலைகள் மற்றும் ரைஸ்மில்களில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம்தான் வேலைக்கு ஆள்களை எடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.